யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)

Jaffna Hindu College Old Boys' Association (UK)

Estd 1987




# KALAIYARASI
# கலையரசி
# 2016

1ST MAY 2016

THE BECK THEATRE


Lycamobile
Call the world for less
LCG
RiverSure Insurance
Lyca TV
LycaFly
Lycaremit

# CASUARINA tree

Restaurant & Bar

Sri Lankan & Indo Chinese Cuisine



- Bed and Breakfast
- Function Room
- Beer Garden
- Shisha Bar
- Ample car park









**020 8648 4868**

407, London Road, Mitcham, Surrey, CR4 4BG, United Kingdom.

www.casuarinatree.com Info@casuarinatree.com

Jaffna Hindu College Old boys' Association (UK)
(Estd 1987)

Proudly presents

# கலையரசி
# KALAIYARASI 2016

**1st May 2016**
**Sunday**

**Chief Guest**
**Mr Thambirajah Thurarajah** *BSc, Dip in Education*
(Years at Jaffna Hindu College : 1970 - 1990)
&
**Mrs I Thurarajah**

**The Beck Theatre,**
Grange Road, Hayes, Middlesex UB3 2UE

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவையியல் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரின கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.



# கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

கல்லூரி அன்னையின் புகழ்பரப்பும் கலையரசி 2016 இற்கு எனது வாழ்த்துக்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பது உலக தமிழர் கல்விப் பாரம்பரியத்தில் மிகுந்த தாக்கத்ததை ஏற்படுத்தி சர்வதேச ரீதியில் பேசப்படுகின்ற ஒரு கல்லூரி என்றால் அது மிகையல்ல.

சைவத்தமிழ் பண்பாட்டோடு பல்துறைசார் கல்விக் கலாசாரத்தில் தன் ஆளுமையை பதித்து பல்துறை விற்பன்னர்களை உருவாக்கி உலகுக்கு ஈந்த பெருமை எமது கல்லூரிக்கு உரியது.

உலக நாடுகளிலே அதிக பழையமாணவர் சங்கங்களை கொண்ட ஒரு தனிப்பெரும் கல்லூரி எமது இந்துக் கல்லூரியே.

பழைய மாணவர்கள் தாம் வாழும் நாடுகளில் தம் கல்லூரி தாயை நினைவு கூர்ந்து வருடா வருடம் விழா எடுக்கின்ற மரபு கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம் இலங்கைக்கு வெளியே மூத்த பழைய மாணவர் சங்கம் இவ்வகை நிகழ்வுகளை முன்னெடுத்து செல்வதில் முன்னோடிகளாக செயற்பட்டுவருவது மிகவும் பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்றது.

இந்த வகையில் 2016ஆம் ஆண்டிலும் கல்லூரியின் 126ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் முகமாக மிகப்பெரும் எடுப்பிலே கலையரசி 2016 இனை கொண்டாடவிருப்பது கல்லூரிக்கும் உலகம் வாழ் கல்லூரி மைந்தர்களுக்கும் பெருமைதரும் விடயமாகும்.

எமது கல்லூரி அன்னையின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவினை கடந்த செப்ரெம்பர் மாதம் நாம் கொண்டாடிய போது எனக்கு தோளோடு தோள் நின்று உழைத்தவர்களில் ஐக்கிய இராச்சிய பழையமாணவர் சங்கத்திற்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் மிகப்பெரும் பங்கு உண்டு.

இதற்காக உங்கள் அரிய அர்ப்பணிப்பான சேவைக்கு எனது மனம் நிறைந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு முன்னரே நடைபெற்ற அனைத்து ஆரம்ப பணிகளிலும் பங்குகொண்டது மட்டுமன்றி விழா நடைபெறுவதற்கு பல நாட்களுக்கு முன்னரே இங்கு வருகைதந்து நேரடியாக என்னோடிருந்து விழா தொடர்பில் ஏற்பட்ட பாரிய சாவல்களுக்கும் எனக்கு பக்க துணையாகவிருந்து முகம் கொடுத்து, "இவ்விழா 1972ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழராய்ச்சி மாநாட்டிற்கு பின்னர் நடைபெற்ற மாபெரும் இந்திர விழா" என பலராலும் போற்றப்பட காரணமாகவிருந்தமைக்கு கல்லூரியின் அதிபர் என்ற வகையிலே தங்கள் அனைவருக்கும் நன்றியை கூறுகின்றேன்.

இவ்விழாவில் அமைப்பாளர்களாக, நிகழ்ச்சி தலைவராக, விருந்தினர்களாக, அபிமானிகளாக, சங்க உறுப்பினர்களாக மற்றும் சகல வழிகளிலும் கலந்து கொண்டும் நிதியுதவியளித்தும், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கியும் கல்லூரி வளம்பெற பல செயற்திட்டங்களைசெய்தும் உதவி புரிந்த தங்கள் ஒவ்வொருவரது சேவையையும் இச்சந்தர்பத்தில் நினைவுகூர்ந்து எனது இச்செய்தி ஊடாக தங்கள் அளப்பரிய சேவையை இங்கு பதிவு செய்து கொள்கின்றேன். மேலும் 125ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு எமது கல்லூரிக்கு சிவராமலிங்கம் ஞாபகார்த்த நூலகத்தினையும், மற்றும் வகுப்பறை கட்டட தொகுதிகளையும் புனரமைத்து வழங்கியதோடு, மாணவ முதல்வர் ஒன்றுகூடலையும், "The Leader" சஞ்சிகையும் வெளியிட உதவிபுரிந்தமையும் மாணவர் மென்திறன் விருத்தி செயற்திட்டத்தினை பொறுப்பேற்று அதற்கான செயற்பாடுகளை மெற்கொண்டு வருகின்றமையும் எமது கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத்துறை விருத்திக்காக நிதியம் ஒன்றினை உருவாக்கிச்செயற்படுத்தி வருகின்றமையும் இங்கு நன்றியுடன் குறிப்பிடக்கூடிய விடயங்களாகும்.

எம் அன்னையின் புகழ்பரப்பும் கலையரசி 2016 விழாவானது சிறப்புற அமைய எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்வரும் காலங்களிலும் கல்லூரியோடு தாங்கள் ஒன்றித்து வாழ்கின்ற வாழ்வு நிலைபேறுடையதான அபிவிருத்தியுடன் தொடர்ந்தும் மிளிரவேண்டும் என்பதுடன் எவ்வித தனிப்பட்ட நோக்கின்றி கல்லூரயின் சிறப்பே தாங்கள் சிறப்பு என வாழும் உங்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல சிவஞானவைரவப் பெருமான் சகல சௌபாக்கியங்களையும் வழங்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

நன்றி
திரு. ஐ. தயானந்தராஜா
அதிபர்.

*I. Thayanandarajah*
**Principal**
**Jaffna Hindu College**
**Jaffna**

# பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி

தமிழர் தலை நிமிர் கழகமாக விளங்கும் யாழ் இந்துக்கல்லூரியின், ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் எடுக்கும் வருடாந்த விழாவான கலையரசி மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று வாழ்த்து கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

யாழ் இந்துவின் மாணவச் செல்வங்கள் பலர் உலகின் பல பாகங்களிலும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாக உயர் தொழில்களில் கடமையாற்றி வருகிறார்கள்.

அவர்கள் எல்லோரும் யாழ் இந்து அன்னைக்கு மட்டுமல்ல மனித சமுதாயத்திற்கே பெருமையும் புகழையும் வழங்கி பெருமைப்படுத்துகின்றார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை ஆகும்.

நம் இந்துவின் மைந்தர்கள் சென்ற இடங்களில் எல்லாம் பழைய மாணவ சங்கங்களை நிறுவி தாம் கற்ற பாடசாலைக்கு நன்றி செலுத்தும் வகையில் தம்மால் இயன்ற உதவிகளை செய்துகொண்டே இருக்கிறார்கள்.

அவ்வகையில் ஐக்கிய இராச்சிய கிளையினரும் தம்மாலான உதவிகளை யாழ் இந்துக் கலூரிக்குச் செய்யது வருவதை யாவரும் அறிவர்.

~தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று~

என்ற வள்ளுவரின் வாக்குக்கு இணங்க யாழ் இந்துவின் பழைய மாணவர்கள் உலகெங்கும் புகழ் பரப்பி வருவது போற்றுதற்குரியதாகும்.

இத்தகைய விழாவை வருடந்தோறும் நடாத்தும் போது பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் என எல்லோரும் ஒன்றுகூடி தம்மிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்த்துக்கொள்ளும் களமாக இவ்விழா அமைகிறது.


அது மட்டுமல்ல தற்போதைய கல்லூரியின் நிலையும் எதிர்காலத்தில் என்னென்ன தேவைகள் பூர்திசெய்யப்படவேண்டும் என்பதையும் அதன் வளர்சிகள் பற்றியும் பேசி அறிந்துகொள்ள உதவும் விழாவாகவும் இவ்விழாவை நோக்கலாம்.

இக் கலையரசி விழாவிற்கு பிரதம விருந்தினராக என்னையும் எனது துணைவியாரையும் அழைத்தமைக்காக மிகவும் மகிழ்ச்சியுடன் எனது நன்றியறிதலை இவ் விழாக் குழுவினருக்குத் தெரிவித்துகொள்கிறேன்.

இயந்திரமையமான வாழ்க்கையைக் கொண்ட இக்கால வாழ்க்கையில் தாம் கல்வி பயின்ற இந்து அன்னையை மறவாது அவளுக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் நல்ல உள்ளங்கள் வாழ்க!

'வாழிய யாழ் இந்துக் கல்லூரி வாழிய வாழியவே' என்று வாயார வாழ்த்துக் கூறி எனது ஆசியுரையை முடிக்கிறேன்.

தம்பிராஜா துரைராஜா





# Message from President

## Dear friends,

It gives me immense pleasure to welcome you all to our prestigious annual cultural event, Kalaiyarasi 2016.

The Alma mater is a leading provider in the field of education and thereby has contributed much in the soul and sprit of northern Thamils. Our Jaffna Hindu College has a unique place in the history of preserving and promoting the Thamil culture and heritage. The students who have passed through its portals are spread all over the Sri Lanka, across the world and have distinguished themselves in all they do.

To maintain our beloved college's high standard and proud history, we as JHCOBA UK, have made an enormous contribution for the last 29 years since our inauguration in 1987. JHCOBA UK continuously supports our college on such a large scale with the help of old boys, friends and of course, our sponsors. In the last 19 months during my presidency, our committee has worked extremely hard and contributed in many ways to our inthu annai, as well as the wider Thamil community.

I am very honoured and privileged to work with some of the most determined members of our executive management committee. After the biggest and most successful Kalaiyarasi in our OBA's history in July 2015, we had an incredible celebration in Jaffna for our school's '125 year of excellence' in September 2015. More than two-thirds of our executive committee, past presidents, several old boys and their families from all around the globe witnessed these outstanding events.

The 125 years celebration arrangements were top drawer and lead by Mr Sri Ranga, Principal, OBA Colombo and many other individuals. Over 4,000 passionate JHC followers made history by walking the streets of Vannarpannai and Jaffna during the Hindu walk. We were overwhelmed by the support from our distinguished guests, which included the Minister of Education, Hon Mr Akila Viraj Kariyavasam, the Deputy Minister of Women's Affairs, Hon Mrs Vijayakala Maheswaran, Northern province Chief Minister, Hon Mr C V Vigneswaran and many more.

We as JHCOBA UK played a major part in the 125 celebration.

We not only contributed to the financial share but also took care of the second day afternoon celebrations. I also want to say thanks from the bottom of my heart to the three members of our OBA for their generous contribution, who through our facilitation, helped renovate blocks C & D as well as form a JHC sports development fund with the initial deposit of Rs 40 lakhs.

Finally friends, on behalf of our management committee, I extend my sincere thank you to all our sponsors and well-wishers for their ongoing support and you for your presence here today to make this event a success.

I wish you all a great and enjoyable evening.

"Together We Are Stronger"

*Saba Suganthan, BEng (Hons)*

President,
JHCOBA UK

# Message from Jaffna OBA President

It gives me a great pleasure to pen this message for the annual cultural program of JHC OBA UK – Kalai arasi as a president of mother OBA.

Though it is unfortunate the people of our land has been scattered all over the world due to internal conflicts, it is so great to see that we are connected forever through our roots.

Every boy who came into mother JHC shall remember the journey in which he was mold into a responsible human being and every milestone he came across thus, the school and its community means a lot for everyone as it lasts as a witness for the growth and development of one.

No one can deny that we the hinduites share a special emotional bond among us more than just other school mates.

It is a proud thing that we always carry the love of our mother JHC forever in our life and unite as one in the name of her no matter how we differ by our own character, beliefs and choices to race, religion and community we belong to.

OBA – Uk hold a special place among all the old boys' associations around the world for it is enduring services and helps rendered to the development and maintenance of school in numerous ways, one good example is the development of hostel fund.

It is indeed a noteworthy that the community of hinduites in UK spends their valuable time and wealth to volunteer to serve the school community despite the burdens of their own lives.


Whenever a helping hand is lend to JHC from rest of the world the mother JHC rejoices that her deepest connections with her sons are refreshed.

It is with so much of happiness and proud I extend the warmest congratulations to OBA UK for the successful running of this annual event.

I wish you all the best and a great time at the event.

Let us keep the sprit forever and remember our mother forever.

***Dr V Yoheswaran***
President
JHC OBA Jaffna



# யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்த வருடமும் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் இலண்டனில் கலையரசி-2016 விழாவை பெருவிழாவாகக் கொண்டாடவும்-கலையரசி மலரை பெறுமதி மிக்க மலராக வெளியிடவும் ஒழுங்குகள் மேற்கொண்டு வருவது அறிந்து அகம்மிக மகிழ்ந்து வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அளப்பிலா ஆனந்தம் அடைகின்றேன்.

வாழ்நாளில் எங்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் யாழ். இந்துவின் மைந்தர்களாகி அறிவையும் ஏனைய திறமைகளையும் உரிய காலத்தில் பெறக்கிடைத்த அதிர்ஷ்டம்.

ஆண்டுகள் பல கடந்தாலும் எங்கள் மனத்திரையில் ஆழப்பதிந்த இந்துக்கல்லூரி வகுப்பறைகளுடன் காலைவேளைகளில் காங்கேசன்துறை வீதியருகே இறைவனைப் பற்றி சிந்திக்க வைக்கும் பிரார்த்தனை மண்டபம், கூடவே குதூகல நிகழ்ச்சிகளைத் தந்த குமாரசுவாமி மண்டபம்- உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கு முன்னணியில் இருப்பதற்கு எங்களைத் தயாராக்கிய விஞ்ஞான ஆய்வு கூடங்கள், மாலைவேளைகளில் மகிழ்வையும் உடல்வலுவையும் தந்த விளையாட்டு மைதானம், விடுதி வாழ்க்கையில் கிடைத்த அறுசுவை உணவு எல்லாமே நினைக்க நினைக்க ஆனந்தம் தான்! ஆனந்தம் என்பதை விட பேரானந்தம் என்பது மிகமிகப் பொருத்தம்.



எந்த ஊராக இருப்பினும் எந்தக் காலமாக இருப்பினும் இதயக் கோவிலில் நிலைத்து வாழும் அன்னை இந்து அதன் மைந்தர்களுக்கு அருளையும் ஆனந்தத்தையும் அளித்துக் கொண்டே இருக்கிறாள்., இருப்பாள்.

இலண்டனிலும் இந்து அன்னையின் அருளையும் ஆசியையும் தொடர்ந்து பெற வேண்டி விழாவெடுத்து, மலர் படைக்கும் பழைய மாணவர்களையும், அவர்களுக்கு ஆதரவளிப்போருக்கும் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு சார்பாக வாழ்த்து தெரிவித்து மகிழ்கின்றேன்.

**எம். என். அசோகன்**
தலைவர்
யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கொழும்பு



RiverSure
Financial Services
*Building Business on reputation is our goal*

# Need a mortgage?

Make sure it's the right one.



You've spent all that time finding the right home - surely you should spend some time finding the right mortgage. We can help you do just that. Your home may be repossessed if you do not keep up repayments on your mortgage.

**Get the right advice now, contact us on:**

Tel: 0208 905 8881 / 8831

Fax: 0208 905 8271

Knightsbridge House, Kingsbury Road, London, NW9 8XG

A fee of 1% of loan amount with minimum fee payable of £895 with an outset payment £295 payable when you apply for a mortgage, and balance to be fully paid upon receipt of offer. we will also be paid commission from the lender.

# செயலாளரின் பேனாவில் இருந்து...



**யா**ழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரித்தானியக் கிளையினரகிய நாங்கள் எமது வருடாந்த விழாவான கலையரசிக்கு இங்கு வருகை தந்துள்ள பழைய மாணவர்கள், அவர்தம் குடும்பத்தினர், நலன்விரும்பிகள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

முப்பதாவது ஆண்டை நோக்கி வீறுநடை போடும் எமது சங்கம், கல்லூரிக்கு சேவை செய்வதையே பிரதான குறிக்கோளாக கொண்டு இயங்கி வருகின்றது.

1987இல் 33 பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று இருநூற்றுநாற்பததுக்கு மேற்பட்ட ஆயுட்கால உறுப்பினர்களையும் ஆயிரத்திற்கு மேலான பழைய மாணவர்களையும் கொண்டு பெரு விருட்சமாக வளர்ந்து இருக்கின்றது என்றால் அதற்கு முதற்காரணி வருடம் ஒரு முறை வந்தனம் செய்யும் அன்னை கலையரசியேயாவாள்.

அதிவேகமாக மாறிவரும் இந்த கணணிமயமாக்கப்பட்ட உலகில் நாமும் உங்களை மின்னஞசல் மூலமாகவும் சமுக ஊடகங்கள் மூலமாகவும் தொடர்புகொள்ள விளைகின்றோம்.

இதனனால் எமது செலவையும் குறைக்க முடியும்.

ஆகவே எம்மிடம் இருந்து செய்திகளை மின்னஞசல் மூலம் பெற விரும்புவர்கள் secretary@jhc-oba.org.uk என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

ஆயிரக்கணக்கில் பழைய மாணவர்கள் ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்தாலும் மிகச் சிறிய தொகையினரே சங்க நிர்வாகத்தில் பங்கேற்பது மனவருத்தற்குரியது.

குறிப்பாக இளம் சந்ததியினர் மிக சொற்ப அளவிலேயே அங்கத்தவர்களாக உள்ளார்கள்.

இளையவர் அனைவரையும் உங்களின் சங்கத்தில் உறுப்பினராகும்படி உரிமையோடு அழைக்கின்றேன்.

அதேபோன்று கடந்த காலங்களில் ஏற்பட்ட சிறு சிறு கருத்து வேறுபாடுகளால் எம்மை விட்டு விலகி சற்று தொலைவில் இருக்கும் அனைவரையும் மீண்டும் எம் அன்னைக்கும், தாயகத்தில் நொந்து போய் இருக்கும் எம் உறவுகளுக்கும் ஆற்ற வேண்டிய சேவைகளை செவ்வனவே செய்ய சங்கப் பணிகளில் இணையும் படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும் எம்மண்ணை நின்னிலம் மறவோம்


இவன்
**சி. கிருபாகரன்**





Lycamobile
Call the world for less
1500 Minutes
Sri Lanka
HUTCH Mobile Number
HUTCH
Sri Lanka Hutch Bundle
With this offer you save 90% on calls to Sri Lanka
Minutes | Price | Validity | Bundle code
1500 | £15 | 30 Days | 7515
To buy | Text the Bundle code followed by a space and the Sri Lanka Hutch number to 3535 (e.g. 7515 009478xxxxxxxxx to 3535)
UK Plan UL
4G
9GB Data
Unlimited
Minutes & Texts
To buy Text : 12544 to 3535
Only! £20 /30 days
Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears.
Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. In bundle data usage is rounded up and charged in 1KB increments. Once the data allowance of a bundle has been fully used, additional data usage will be charged at standard rate. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 21.03.2016. Lycamobile Sri Lanka favourite Hutch bundle ("the offer") inclusive allowances are for calls from Lycamobile to a standard Sri Lankan Hutch mobile number only. Other usage and usage in excess of your allowance will be charged at standard rates. The offer is valid for 30 days from the date of purchase. A customer may have only one bundle for the same favourite Hutch number, on their account at any one time. Any remaining allowance after the validity period will not be carried over into the next period should the customer renew their bundle. Customers will be able to change the Sri Lanka Hutch number before the renewal of the current bundle, unless the beneficiary number is changed auto renewal will be made on the account with the same Hutch number. You will receive a confirmation message shortly after stating that it has been applied to your account. You should wait for this message before calling the Sri Lanka Hutch number. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards one-off and recurring payments for bundles. Lycamobile reserves the right to replace or amend the promotion or these terms and conditions or to withdraw the offer at any time on reasonable notice. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that the offer is being used for commercial purposes or for conferencing. Promotional period: Valid from 11th March, 2016. Promotional period: Valid from 23rd February, 2016
Lyca mobile
Call the world for less

# ஏழைக்கு எழுத்தறிவித்தல்



அன்ன சத்திரம் ஆயிரம்
வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்

என்று மகாகவி பாரதி பாடியது போல போரினாலும், வறுமையினாலும் சிதைந்து போன சிறுவர், சிறுமியரது வாழ்வில் கல்வி என்னும் விளக்கு ஏற்றி வைக்கும் கருவியாக மகாதேவா படிப்பகம் தனது செயற்பாடுகளை முன்னிறுத்தி வருகிறது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இரசாயவியல் ஆசிரியராக இருந்து மாணவர்களிற்கு கல்வியையும், சமுகத்தொண்டையும் கற்பித்த ஆசிரியர் மகாதேவா அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் பழைய மாணவர்கள் மகாதேவா படிப்பகம்' என்னும் கல்விசார் சமுகசேவை நிறுவனத்தை வன்னிப் பிரதேசத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்டுவான் என்னும் கிராமத்தில் 2012 ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் தொடங்கி இருபத்தந்து ஆண்டுகள் நிறைவு பெற்ற நிகழ்வினை ஒட்டி மகாதேவா படிப்பகம்' தொடங்கப்பட்டது. தண்டுவான் மகாவித்தியாலத்தின் மாணவ, மாணவியர்கள் பாடசாலை முடிந்த மாலை நேரங்களிலும், வார இறுதி நாட்களிலும் படிப்பகத்தில் வந்து கல்வி கற்கிறார்கள்.

தொடங்கிய ஓராண்டில் 2013 ஆம் ஆண்டில் தண்டுவான் மகா வித்தியாலய வரலாற்றில் முதன் முறையாக மாணவ, மாணவியர் கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்று மகாதேவா படிப்பகத்தின் கடின உழைப்பு தமது கல்வியிற்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.
2014 ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்திற்கு சென்ற மாணவர்களில் முதன் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களிற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் ஒவ்வொரு மாதமும் நிதி உதவி செய்து வருகிறது.

இவர்கள் போரினால் தமது தாய், தந்தையரை இழந்து தமது உறவினர்களுடன் வாழ்ந்து வரும் மாணவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 2015 ஆம் ஆண்டு சித்தியடைந்த மூன்று மாணவர்களிற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் பிரித்தானிய பழைய மாணவர் சங்க உறுப்பினருமான திரு. மஜீதரன் (89 உயர்தரம்) அவர்கள் அம்மாணவர்களின் கல்விக்கும், வாழ்விற்குமான உதவிகளைச் செய்து வருகிறார்.

2012 ஆம் ஆண்டு தொடங்கிய மகாதேவா படிப்பகத்தின்' நிர்வாகச் செலவுகளிற்காக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினால் வருடம் தோறும் ஒன்பது இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டு வருகிறது. எம் கல்லூரித் தாயின் அன்புப் புதல்வர்களின் பெருமுயற்சியினால் இச்சமுகத் தொண்டு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

இக்கல்வித் தொண்டுக்கு கை கொடுக்கும் கல்லூரித் தாயின் கண்மணிகளிற்கு பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் கோடானுகோடி நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

துரைராஜா பிரபாகரன் (90 உயர்தரம்), சிவலோகநாதன் ஜெகன் (88 உயர்தரம்), செல்வதுரை செந்தில்நாதன் (2012 பழைய மாணவர் சங்க தலைவர்) ஆகியோர் மகாதேவா படிப்பகத்தின் பிரித்தானியா இணைப்பாளர்களாக இருந்து வருகின்றார்கள்
கடந்த 2015 ஆம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 125 வருடங்கள் நிறைவடைந்தது.

அதன் ஒரு அங்கமாக முல்லைத்தீவு தண்டுவான் மகாவித்தியாலய மாணவர்களிற்கும், மண் சரிவினால் பாதிக்கப்பட்ட பதுளை தெமோதரை சௌதம் தமிழ் மகாவித்தியாலத்திற்கும் யாழ் இந்துக் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் பாடசாலை உபகரணங்களை வழங்கியது. பிரித்தானியாவில் இருந்து சென்ற பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவிற்கும்,

மலையகத்திற்கும் நேரில் சென்று இந்த உதவிகளை வழங்கியிருந்தனர். யாழ் இந்துக் கல்லூரி பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் இந்த முன்முயற்சியை இன்று மற்றப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களும் பின் தொடர்ந்து வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ள பாடசாலை மாணவர்களிற்கு தமது உதவிகளை வழங்கி கல்விக்கும், சமுகத்திற்கும் பெருந்தொண்டு செய்கிறார்கள்.

இதுவரை சபா சுகந்தன் (86 உயர்தரம்), செல்வதுரை தேவராஜா (86 உயர்தரம்), சாந்திரட்னம் ஜெயபிரகாஷ் (89 உயர்தரம்), துரைராஜா பிரபாகரன் (90 உயர்தரம்), சிவலோகநாதன் ஜெகன் (88 உயர்தரம்), செல்வதுரை செந்தில்நாதன் (2012 பழைய மாணவர் சங்க தலைவர்), சஞ்சீவ்ராஜ் (88 உயர்தரம்) ஆகியோர் மகாதேவா படிப்பகத்துக்கு நேரடியாக சென்று தேவையான விடயங்களை செய்து இருக்கின்றார்கள்

125 ஆம் ஆண்டு நிறைவையொட்டி கல்லூரியில் நடந்த விழாவில் முல்லைத்தீவு தண்டுவான் மகாவித்தியாலயம், மகாதேவா

படிப்பகம் என்பவற்றை சேர்ந்த மாணவர்களின் நாடகமும் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையினால் மேடையேறியது. பிரித்தானியாவில் தமிழ் அவைக் காற்று கழகம்' என்ற நாடகத்திற்கான அமைப்பையும், பள்ளியையும் நடாத்தி கலைத் தொண்டு செய்து வருபவரும், யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான இயக்குனர் பாலேந்திரா அவர்கள் இலங்கை சென்று அம்மாணவர்களின் நாடகத்தை நெறிப்படுத்தினார்.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று அம்மாணவர்கள் தமது வாழ்வையும், வலிகளையும் நாடகமாக வெளிப்படுத்தியமையை ஊடகங்கள், பொதுமக்கள் என எல்லாத் தரப்பினரும் பாராட்டினார்கள்.

தண்டுவான் மகாவித்தியாலத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் வரையிலான வகுப்புகள் மட்டுமே இருக்கின்றன.

அங்கு சாதாரண தரம் வரையில் கல்வி கற்று பின்பு முல்லைத்தீவு மாவட்டத்தின் பிற பாடசாலைகளிற்கு கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளிற்கு கல்வி கற்க செல்லும் மாணவர்களிற்கும் மகாதேவா படிப்பகம்' தனது கல்விச்சேவையை தொடர்ந்து செய்து வருகிறது.


இவ்வாறு தண்டுவான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இரு மாணவர்கள் முதன் முறையாக 2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரிட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்பதற்கு தெரிவாகியுள்ளனர். மகாதேவா படிப்பகத்தின் நோக்கங்களை மாணவர்கள் தமது கல்வி வாழ்க்கையில் முன்னேறுவதன் மூலம் நடைமுறைப்படுத்திக் காட்டுகிறார்கள்.

திரு. மகாதேவா அவர்கள் தமது பாடசாலைப் பணி முடிந்தவுடன் மாலை நேரங்களில் மாணவர்களிற்கு இலவசமாக கற்பித்து வந்தவர் தமது மாணவர்கள் முன்மாதிரிகளாக, சமுக உணர்வு கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்பதை எப்பொழுதும் வலியுறுத்தி வந்தவர். இன்று அவரின் மாணவர்கள் அவரின் சொல்லை, அவரின் செயலை தொடருகின்றார்கள்.

இந்த முன்முயற்சிகள் தொடர வேண்டும். இன்னும் பல்கிப் பெருக வேண்டும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களும், நமது குழந்தைகளின் வாழ்வில் அக்கறை கொண்டவர்களும் சேர்ந்து மகாதேவா படிப்பகத்தின் முயற்சிகளிற்கு தொடர்ந்து உதவி செய்வதன் மூலம் இப்பாரிய பணியை இன்னும் பெரிய அளவில் செய்ய உறுதி கொள்வோம். எவ்விடமேகினும் எத்துயர் நேரினும் எம்மன்னை நின்னலம் மறவோம்

**சிவலோகநாதன் ஜெகன்**
மகாதேவா படிப்பக திட்ட ஒருங்கிணைப்பாளர்




LCG TRADER
THE ULTIMATE TRADING EXPERIENCE
10% BONUS*
*Open a live account and fund it with £500 or more to receive a 10% Bonus on your first deposit, up to £10,000. A charitable donation to the JHC OBA will be made for all accounts opened via this link www.lcg.com/JHC2016
Losses can exceed deposits.
LCG
TRADE CONNECTED
FOREX | INDICES | SHARES | COMMODITIES

# RACE FOR EDUCATION

## DEMONSTRATING SOCIAL RESPONSIBILITY

### 1. Preamble

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள கருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
- பாரதியார்

Provision of literacy to the poor is million times more meritorious than founding thousands of soup kitchens or the building of ten thousand temples or the setting up of great charities that proclaim their name and fame - Maha Kavi

This is how Maha Kavi values education. He saw the provision of education to the poor as a mean to establishing an enduring social justice system as it would bring them up the social fabric thus empowering them to take over the responsibilities of the new social order.

Interaction nurtured at school is a binding force among school pals that helps preserve the cultural values and moral principles gained while being young.

What was inherited at school makes it possible for us to take on social responsibility in later life. Irrespective of our individual achievements, as old school boys or girls, it is pay back time for us as we were so fortunate to have good schooling.

Every student benefitted from the free education system prevalent in Sri Lanka and hence bears the social responsibility of passing on this legacy to the generations that follow. It is significant that 80% of the indirect taxes contributed by every citizen irrespective of their income status go to the pot set aside for free education.

Therefore, as students of the past, it is imperative that in some way we contribute to the social and economic well-being of our communities. Jaffna Hindu College's history shows, we have always had the culture of Social Responsibility embedded in us.

A good example is the long list of past students and teachers who have contributed immensely for the betterment of the Tamil society for the past 125 years.

Every student leaves JHC empowered with the knowledge and practical skills to make a positive social and economic impact in their professional and personal lives. In 2015, group of JHC 92 (A/L) batch UK, upon the request of educationists, initiated a program - "Race for Education" - with the support of JHC OBA UK, to demonstrate their "Social Responsibility".

This program is to continue for the year 2016 with JHC 92 old boys joining hands from the cities of Melbourne, Jaffna and Toronto along with London to strengthen this noble cause.

**TABLE 1**

| Year | Subject | No of Students Sat for Exam | No of Students Passed | No of Students Unsuccessful | Unsuccessful % |
|---|---|---|---|---|---|
| 2013 | Maths | 15176 | 8971 | 6205 | **41%** |
| | Tamil | 15017 | 12412 | 2605 | **17%** |
| 2014 | Maths | 15176 | 8971 | 6205 | **41%** |
| | Tamil | 15017 | 12412 | 2605 | **17%** |

*(The performance in Eastern and Central provinces fell behind that in the Northern Province)

## 2. Overview

In the Northern Province, every year, about 15,000 students sit the General Certificate in Education of Ordinary Level (GCE O/L) examination which is the stepping-stone for secondary education leading to the General Certificate in Education of Advanced Level (GCE A/L) which paves the way to enter University or any other higher education.

In order to be successful in GCE O/L every student should pass at least six subjects with a compulsory pass in the first language and Mathematics.

According to key officials of Ministry of Education of Northern Province, a significant number of students lost the opportunity for proceeding to secondary education due to failing Mathematics, including those who passed the first language together with five other subjects.

Table 1 below shows, in brief, the situation based on GCE O/L results in 2013 and 2014, in the Northern Province;

In the circumstance, the alumni embarked upon a broader approach by engaging in specific activities to improve the success rate of Tamil speaking students in North, East and Central provinces in the subject of mathematics in the GCE O/L examination held in December 2015. With a view to funding the identified activities, JHC 92 old boys with the support of JHC OBA UK, started in July 2015 the campaign of "Race for Education" raising GBP £16,440 through individual and corporate contributions numbering 172. This challenge was achieved within a month.

## 3. Key features

This effort may be considered unique among current educational support programs, particularly in respect of some key features given below;

- To support underprivileged schools with limited functional capacity
- Focus of the demographic area was beyond Jaffna District
- To arrest poor performance

**TABLE 2**

| Province | Education Zones | No of Schools | No of Students | No of Seminars | No of guidebooks |
|---|---|---|---|---|---|
| East | Muthur | 33 | 890 | 22 | 900 |
| | Paddiruppu | 33 | 1154 | 20 | 1175 |
| | Kalkudah | 25 | 720 | 18 | 750 |
| | Batticaloa West | 26 | 916 | 25 | 940 |
| | Batticaloa | 36 | 1170 | 32 | 1334 |
| | Karaithivu | 3 | 57 | 3 | 67 |
| | Manampiti | 2 | 62 | | 69 |
| North | Thunukkai | 24 | 634 | 20 | 325 |
| | Mullaithivu | 41 | 1694 | | 700 |
| | Madu | 24 | 446 | 18 | 200 |
| | Jaffna Islets | 31 | 954 | 4 | 475 |
| | Kilinochchi | 65 | 2456 | 12 | 1375 |
| | Vavuniya North | 31 | 554 | 6 | 325 |
| | Jaffna (for handing over and selected schools) | 3 | 125 | | 365 |
| Central | Nuwara Eliya | 29 | 1070 | 24 | 1000 |
| | | 406 | 12902 | 204 | 10000 |

in mathematics at the GCE O/L examinations which results in depriving future formal higher education opportunities

Increased reputation for JHC & alumni

## 4. Results and Achievements

Over 12,900 students from 406 schools directly benefited from support extended under the project. Breakdown of the schools and work books distributed are shown in Table 2;

Over Rupees 1.7 million was spent on printing the guidebooks and Rupees 1.2 Million was spent on conducting additional seminars for coaching the students in order to increase their chances to improve their performances in the O/L examination in 2015.

At least 200 additional seminars were held in over 150 centres with the engagement of over 250 teachers as resource personnel for the benefit of 11,000 students from 365 schools. It is estimated that over 4000 teaching hours were contributed by these resource personnel for coaching students.

A strong message was shared among the community; mainly among the stakeholders engaged in the educational development as that the Diaspora community in the overseas are ready to support the educational development in the provinces.


Results of GCE O/L examinations were released by the Department of Examinations of Sri Lanka on March 19, 2016. Though a detailed analysis of it is yet to be done, initial discussions with Zonal Directors of Educations and key officials from the zones supported under this initiative indicated that positives are predicted.

## 5. Way Forward

The JHC old boys will continue their educational support programs with social responsibility during the year of 2016 with the support of old boys associations. Lessons learned and experience gained through the program held in 2015, contributed positively to design an effective implementation strategy to achieve the goal of "minimum possible failure rate in mathematics at GCE O/L in the Tamil speaking areas". In 2016, as part of the fund raising event for the Race for Education Program, a 5km (2km for children) run is planned on 30 July 2016 in the cities of Melbourne, Jaffna, London and Toronto. We anticipate every one of you to support us to achieve our goal through "Race for Education" program.


In this relay which is aimed at lending a helping hand for the advancement of education, please affiliate yourself so as to strengthen our efforts.

In this small effort which is directed towards meeting the challenges that are staring at our future generation there remain many more things that cry for immediate attention



(RACE FOR EDUCATION — 2015 LONDON)

# RACE FOR EDUCATION




நமது எதிர்கால சந்ததியின்
கல்விக்குக் கை கொடுப்போம்

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்

INFO@JHC92.COM

Affiliate yourself with family to strengthen our 'NOBLE CAUSE'

MARATHON VENUES
(Kids- 2km, Adults-5km)

Jaffna

London

Melbourne

Toronto

30th July 2016
9.30AM to 12.30PM

Extend your helping hand by following the below link

uk.virginmoneygiving.com/team/JHCOLDBOYSUK

# THE NEED OF PROFESSIONAL AND PERSONAL DEVELOPMENT

## A CRITICAL ANALYSIS ABOUT THE FUTURE OF OUR SCHOOLING SYSTEM BACK HOME!

### What is the difference between personal and professional development?

We've all heard of personal development plans, and even professional development plans, but how exactly do you differentiate between the two? And how do you know which one to focus your energies on?

There is a difference between personal development and professional development, and it's easy to get caught in the crossfire of the two when looking to further yours (or others) skills.

But there is huge crossover between them as well…..

So, what are the main differences?

### Professional Development

Professional development involves developing someone in their role to entirely understand the job they do and how they can improve.

It involves enhancing the necessary skills to carry out their role as effectively as possible and is something that will continue throughout their working life.

With changes to our working lives happening every day, be it economical change, amendments in legislation or even the advance of technology, it is important to develop your skillset to remain effective in your career.

Effective professional development involves ensuring your knowledge and understanding of your area of expertise for your career is always at the highest possible level.

It is the acquisition of skills and knowledge for career advancement, but it also includes an element of personal development.

### Personal Development

When you think of personal development, think about what skills someone needs to accomplish the results required, both in their school / college life and for life in general.

It is about improving their talents and potential, and mould them to be successful in life.

By having a thorough understanding of what they need to achieve and how to achieve it, each student can develop the necessary skills by way of a solution.

Establish exactly what skills you need to succeed in your life.

It can be academic goals, sporting adventures or political aspirations….

This may be influencing skills, you may need to manage teams, or inspire individuals.

It may be that you need to be able to manage upwards or have excellent delegation skills.

When you are able to identify these needs, you are able to work towards a personal development plan.

### Why Is Professional Development So Important?

School systems today (back home) are charged with addressing ever-increasing demands: reducing the achievement gap, adopting

evidence-based practices, meeting adequate yearly progress goals, managing the requirements of another language and ever changing difficult student environment.

Educators must keep abreast of the important advances that are occurring in education.

This is where professional development comes in.

Professional development is defined as "the process of improving staff skills and competencies needed to produce outstanding educational results for students"

"Professional development is key to meeting today's educational demands. High-quality professional development strategies are essential to schools.

The days of teacher staff development sessions consisting of "sit-and-get" workshops and expert-delivered awareness campaigns are long gone.

We are now moving towards more effective and more engaging professional development models.

Research and experience help us recognize that high-quality ongoing professional development that deepens teachers' content knowledge and pedagogical skills; provides opportunities for practice, research, and reflection; and includes efforts that are job embedded, sustained, and collaborative will assist in the goal to remain up-to-date.

## What is effective professional development?

Effective professional development enables educators to develop the knowledge and skills they need to address students' learning challenges.

To be effective, professional development requires thoughtful planning followed by careful implementation with feedback to ensure it responds to educators' learning needs. Educators who participate in professional development then must put their new knowledge and skills to work.

"Professional development is not effective unless it causes teachers to improve their instruction or causes administrators to become better school leaders".

Additionally, professional development is increasingly seen as a systemic process that includes the development of all individuals involved with student achievement from the



superintendent to the teaching assistants.

## THE BASICS of what constitutes professional development?

When people use the term "professional development," they usually mean a formal process such as a conference, seminar, or workshop; collaborative learning among members of a work team; or a course at a college or university.

However, professional development can also occur in informal contexts such as discussions among work colleagues, independent reading and research, observations of a colleague's work, or other learning from a peer (such as shadowing at a leading School) .

So do we need a Professional and Personal Development Plan for our beloved College back home?

The answer is YES.... From measuring the ground situation and also getting feedback from the Principal and various stakeholders of JHC, it is identified that the current system is not producing /bringing up the best out of the JHC Students / teachers and others attached to JHC.

The Personal Effectiveness & Capabilities have to be developed to help define the knowledge, skills and behaviours required of the students & teachers attending JHC in order to be effective in their role and meet the individual needs / objectives and also fulfilling the JHC's expectations / potential.

We the JHC OBA UK, are very keen to launch a Personal Development Plan that should be designed and prioritised to support the immediate development needs at JHC as well as the longer term ambitions and objectives of wider stakeholders.

This plan should enable individuals and targeted groups at the college to take charge of their own learning and development taking into account that knowledge, culture and wisdom becomes a proactive as well as reactive process.

It should allow learners to identify key areas of learning and development activity that will empower them to either acquire new or develop existing skills and behavioural attributes for the following purposes:

Enhance performance in their current role

Address anticipated changes in their current role OR lead, implement and imbed the proposed changes for the betterment

Address career aspirations towards a future role

S. Jeyapragash
PPD Project Coordinator
JHC OBA UK



# Redefining the Face of **Luxury Living** with **Colombo's** Most **Elegant Addresses**

Luxury Living • Investment Property • Holiday Home







S.Thumilan
Group Chairman
ACA, ACMA, ACCA, CGMA
MCSI(UK), CPA(AUS)
FMAAT(SL), ACS





## Completed Projects

| | | | | | |
|---|---|---|---|---|---|
| No.01, Samudra Mw<br>Mount Lavinia<br>(Off Hotel Rd & De Serem Rd) | No.48, Templers Rd<br>Mount Lavinia<br>(Close to Galle Road Side) | No.03, College Avenue<br>Mount Lavinia<br>(Next to ST. Thomas College) | No.30, Siripala Rd<br>Mount Lavinia<br>(Next to U.S.Car Sales) | No.18, Retreat Rd<br>Colombo 04<br>(Adjoining Holy Family Convent) | No.142/4, Galle Rd<br>Colombo 03<br>(Next to Grand Hyatt Col) |

## On-Going Projects


No.45, Alfred House Gdn
Colombo 03
(Adjoining British Council)


No.06, 19th Lane
Colombo 03
(Opposite to Carnival)


No.121, Inner Flower Rd
Colombo 03
(Close to Ladies College)


No.25, Frankfurt Place
Colombo 04
(Opposite St. Paul's Church)


No.502, Havelock Rd
Colombo 05
(Opposite Wheels Lanka)


No.05, Jayasinghe Rd
Colombo 05
(Off Highlevel & Balapunka Rd)


No.23, Moor's Rd
Colombo 06
(Next to Delman Hospital)


No.22, Boswell Place
Colombo 06
(Next to Moor's Road)


No.73, Gregory's Rd
Colombo 07
(Opposite D.S.Senanayake College)


No.05, Railway Avenue
Nugegoda
(Close to Nugegoda Market)


No.19, Barnes Avenue
Mount Lavinia
(Close to S. Thomas College)


No.37/3, Beach Road
Mount Lavinia
(Close to Steam Boat Rest.)


No.06, De Alwis Ave
Mount Lavinia
(Off Hotel Rd & De Seram Rd)


No.31, De Alwis Place
Dehiwala
(Opposite Hotel Concord Grand)

**Total Projects 20** **Total Apartment Units 531**

Our Own Construction Contractor

**LINK** **Link Engineering**
35 YEARS OF EXCELLENCE

Our Affiliations & Accreditations

BOI · CIDA · SLSI ISO 9001 · SLAB · National Chamber · CCI · ACCA · CIMA Chartered Institute of Management Accountants

**Head Office - Sri Lanka**
#32, 1st & 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka

**Branch - United Kingdom**
#11 Meadow Close, Bexleyheath, Kent, DA6 7HB, United Kingdom

**Branch - Dubai, UAE**
Office 1403, Al Manara Tower, Business Bay, Dubai

**www.blueocean.lk** **www.link.lk**

Luxurious Condominiums by

**Blue Ocean**™
GROUP OF COMPANIES

☎ +44 79 6096 9684 (UK) | +94 777 546 546 (SL)


SAI
PHOTOGRAPHY

LIFE PROTECT LINE



# INSURANCE

IS THE ONE OF THE FOUNDATION BLOCKS OF ANY

# Financial Planning

**To Discuss Your INSURANCE needs - Please call**

**Shaji Jose - 07508 017328**

Legal & General

VitalityLife

AEGON

AVIVA

ZURICH

ageas

FriendsLife

LV= LIVERPOOL VICTORIA

## WE WORK WITH THE TOP INSURANCE COMPANIES IN UK

**We talk your language**

LifeLine Protect Limited is an appointed representative of Religare UK Limited which is authorised and regulated by the Financial Conduct Authority. Our FCA number is 607618



# இந்துவின் 125ம் ஆண்டு பெருவிழா...

யாழ்பாணத்தின் அடையாளம் என்று சொல்லப்படுகின்ற யாழ் இந்துக் கல்லூரியின் 125ம் ஆண்டு நிறைவு விழா எத்தனையோ கல்விமான்கள் அறிஞர்கள் விஞ்ஞானிகள் சமூக சேவையாளர்கள் பண்பாளர்கள் சமய அறங்காவலர்கள் என்று 125 ஆண்டுகளாக வார்த்தும் வளர்த்தும் எடுத்தும் எடுத்துக்கொண்டு இருக்கின்ற பாடசாலையின் 125ம் ஆண்டு விழா அது யாழ்பாணத்தின் திருவிழா என்றால் மிகையாகாது.

ஆம் வருணபகவானும் சூரியபகவானும் சங்கமிக்கும் மாதமான புரட்டாதியில் குடாநாட்டிலே அதிலும் யாழ்ப்பாண நகரத்திலே மெல்லிய சாரல் உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆமாம்! நான்கு தினங்களாக எம் அன்னையவளுக்கு அலங்காரத்திருவிழா.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற அன்னையவளின் 125ம் ஆண்டு நிறைவு விழா பற்றித் தான் நாம் இங்கு குறிப்பிட விளைகின்றோம்.

இந்த 125ம் விழா பற்றிய அழைப்பிதழ் கிடைத்ததுமே எம்முள் ஓர் பேரவா, எமது பாடசாலை ஆம்..., எம் அன்னைக்கு பெருவிழா, இதில் நாம் எப்படியாவது இந்த நான்கு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும் என்பதே அது.

அழைப்பிதலினுள் அடங்கியுள்ள நிகழ்ச்சிகளின் கவர்ச்சி, ஒவ்வொரு நிகழ்வுகளையும் ஓரத்திலிருந்தாவது பார்க்க வேண்டும் என்று தூண்டியது.

அன்னையவளின் விழாக்காக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பழையமாணவர்கள், பெற்றோர்கள் என எல்லோரும் ஒருமித்து யாழ்நகரத்தையே விழாக்கோலமாக்கியிருந்தார்கள்.

யாழ்நகரின் பிரதான வீதிகள் மற்றும் பிரதான சந்திகள் எங்கும் விழா வாழ்த்துக்களும் நிகழ்சிகளின் விளம்பரம்களும் காணக்கூடியதாக இருந்தது.

வீதியால் செல்லும் வாகனங்களிலும் 125ம் ஆண்டிற்கான வாழ்த்து ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு காணப்பட்டது இலங்கையின் பிரபல்யமான தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் வாழ்த்துக்களும் விழா அழைப்பிதழ்களும் விழா பற்றிய செய்திகளும் அவ்வாரம் முழுவதுமாக ஆக்கிரமித்திருந்தன.

சமூக வலைத்தளங்களில் பாடசாலையின் 125ம் ஆண்டு இலட்சனையும் 125ம் ஆண்டு நினைவுகளின் பதிவுகளும் ஆக்கிரமித்திருந்தன.

கே கே எஸ் வீதி கல்லூரி வீதி, கஸ்தூரியார் வீதியெங்கும் வீதிக்கு குறுக்காக வெற்றிக்கொடிகளும், வீதியின் இரு மருங்கிலும் அலங்கார மின்சார விளக்குகளும் அத்தோடு பாடசாலை கொடிகளும் கம்பீரமாக பறந்து கொண்டு இருந்தன.

வண்ணார் பண்ணையே நீல

வெள்ளை வர்ணத்தினால் முலாம் பூசப்பட்டிருந்தது.

கல்லூரி வளாகமெங்கும் அலங்கார மின்சார தோரணங்களும், விசேடமாக விழா மண்டபமும் மின்னொளியில் கல்லூரியை அலங்கரித்து கொண்டு இருந்தன.

கடந்த10 மாதங்களாக உலகெங்கும் உள்ள யாழ் இந்து பழைய மாணவர் சங்கங்களால் அன்னையின் 125ம்ஆண்டுநிறைவையொட்டி நடத்தப்பட்ட நிகழ்வுகளின்

உச்சக்கட்டமாக கல்லூரியில் ஒருவாரமாக நடைபெறவுள்ள விழாவிற்காக உலகெங்கும்

இருந்து வரவுள்ள தன் மைந்தர்களை வரவேற்க கல்லூரித்தாய் தயாராகிக்கொண்டிருந்தாள்.

இந்துவின் மைந்தர்கள் யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்நாளும் வந்தது.

செப்டம்பர் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஐக்கிய இராச்சியத்தின் இந்துவின் மைந்தர்களான திரு சா ஜெயப்பிரகாஷ், திரு சா சந்திரப்பிரகாஷ் சகோதரர்களின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட ‘C‘ மற்றும் ‘D‘ கட்டிடத்தொகுதி திறப்புவிழா பெருந்திரளான இந்துவின் மைந்தர் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது.

பின்னர் மாலை 5 மணிக்கு இந்துக்கல்லூரி ஸ்தாபகர்கள் நினைவு நிகழ்வு இடம் பெற்றது.

செப்டெம்பர் 23ம் திகதி காலை 8 மணிக்கு கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூஜைகள் நிறைவுற்றதும் மாணவர்கள் ஆசிரியர்கள் பழையமாணவர்கள் எல்லோரும் மைதானத்தில் ஒன்றுகூடி யாழ்பாணத்தின் மிகப்பெரும் நடைபவனிக்கு (இந்து நடைபவனி - HINDU WALK) ஆயத்தமாகிக் கொண்டு இருந்தனர்.

அந்த மைதானமே நீல வெள்ளையாக நிறைந்திருந்தது.

ஆம் 125ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனிக்காகவே பழைய மாணவர்களால் சிறந்த மற்றும் அழகாக வடிவமைக்கப்பட்ட ரீ சேட் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தது.

பழைய மாணவர்களும் பணம் செலுத்தி வாங்கி அணிந்திருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த நீலம் வெள்ளை ரீசேட் ஆனது மைதானத்தையே அழகாக்கியது.

யாழ்பாணத்தில் இது வரை யாரும் கண்டிராத அளவில் ஏற்பாட்டாளர்களின் ஏற்பாடுகள் காணக்கூடியதாக இருந்தது.

காலை 8 மணிக்கு பாடசாலை மைதானத்தில் ஆரம்பித்த இந்து நடை (HINDU WALK) ஆனது யாழ்ப்பாணத்தில் இதுவரை வரலாறு காணாத ஒன்றாக அமைந்திருந்தது.

ஏறத்தாழ 4000 பேர் வரையில் பங்குபற்றிய இந்நடைபவனியில் யாழ் இந்து அன்னையின் நீல வெள்ளை கொடியினை ஏந்தியவண்ணம் மாணவ முதல்வன் குதிரையில் கம்பீரமாக முன் செல்ல பின்னால் அலையலையாகமாணவர்கள், பழையமாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என நீல வெள்ளை உடையிலும் மாணவ குழுக்கள் தத்தமது சீருடையிலும், தொடர்ந்து வாகன ஊர்திகள் மயிலாட்ட ஒயிலாட்ட குழுக்கள் என யாழ் நகர பிரதான வீதிகளுக்குடாக சென்ற ஏறத்தாழ 3 மஅ நீளமான இந்நடை பவனியானது இந்திர விழா என எல்லோராலும் புகழப்பட்டஇந்து அன்னையின் 125ம் ஆண்டு,நிறைவு விழாவின் அடுத்து வரப்போகும் 3 நாள்

கலை விழாவையும் முழு உலகிற்கும் கட்டியம் கூறுவது போல இருந்தது.

அன்றைய தினம் மாலையில் 125ம் ஆண்டு நிறைவை முன்னிட்ட நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் இரவு மின்னொளியில் பழைய மாணவர்களுக்கிடையிலான சிநேகபூர்வ துடுப்பெடுத்தாட்டப் போட்டிகளும் சிறப்பாக இடம்பெற்றன.

125ம் ஆண்டு நிறைவு கலை நிகழ்வுகள் மூன்று நாள்கள் காலை மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்றன.

ஒவ்வொரு அமர்விற்கும் உலகம் எங்கும் பரந்து இருக்கும் யாழ் இந்து பழைய மாணவ சங்க தலைவர்கள் தலைமை தாங்கினார்கள்.

பிரதம விருந்தினராக புகழ் பூத்த மேதைகள் கலந்து சிறப்பித்தனர்.

இவர்கள் தவிர விழா தலைவர் அதிபர்

திரு. ஐ தயானந்தராஜா, விழா இணைப்பாளரும் பழையமாணவருமான திரு.ஸ்ரீரங்கா, உலகெங்கும் இருந்து கலந்து கொண்ட பழையமாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் கல்லூ ரிமாணவர்கள் ஒவ்வொரு நிகழ்வையும் மண்டபம்நிறைந்து கலந்து சிறப்பித்தனர்.

முதலாம் நாள் காலை அமர்வு நிகழ்வுகள்அதாவது செப்டெம்பர் 24ஆம் திகதி வியாழக்கிழமை 8.30 மணிக்கு விழாவின் பிரதமவிருந்தினராக மாண்புமிகு கல்வி அமைச்சர் கௌரவ அகில விராச் காரியவசம் அவர்கள் கொழும்பில் இருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் பாடசாலை மைதானத்தில் தரை இறங்கினார்.

இவருடன் சிறப்பு விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் வந்தடைந்தனர்.

விருந்தினரை அதிபர், இணைப்பாளர், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் எனகே கே எஸ் வீதி வழியாக கல்லூரிக்கு மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வருகை தந்து கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூஜைகள் நிறைவுற்றதும் விருந்தினர்கள், கல்லூரியின் பாண்ட் வாத்தியத்துடன் விழா மண்டபத்திற்க்கு அழைத்து வரப்பட்டனர்.

மண்டபத்தில் முதல் நிகழ்வாக மங்கள வாத்திய இசை நிகழ்வு இடம்பெற்றது.

அதை தொடர்ந்து வருகைதந்த விருந்தினர்கள், அதீதிகளின் மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து இறை வணக்கமும் புஸ்பாஞ்சலி நடன நிகழ்வும் நடைபெற்றது.

இதன் பின்னர் தலமையுரையை முதலாவது நாள் காலை அமர்வை தலமைதாங்கிய அதிபர் ஐ தயானந்தராஜா அவர்கள் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் ஒருங்கமைப்பில் உருவாக்கப்பட்ட 125ம் ஆண்டுக்கான நினைவு தபால் முத்திரை வெளியீட்டினை கௌரவ கல்வி அமைச்சர் வெளியிட்டு வைத்தார்.

அதை தொடர்ந்து 125ம் ஆண்டுக்கான நினைவு மலர் வெளியீட்டினை பழைய மாணவரும் கொழும்பு நம்பிக்கை நிதியத்தின் தலைவருமான திரு கைலாசபிள்ளை அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

அதன் முதற் பிரதியை பழைய மாணவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ ஈ சரவணபவன் பெற்றுக்கொண்டார்.

அதன் சிறப்பு பிரதிகளை முன்னைனாள் அதிபர்களான திரு அ சிறீக்குமரன் மற்றும் திரு வி கணேசராஜா அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து ஏனையோரும் சிறப்பு பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

அடுத்ததாக பிரதம விருந்தினர் உரையை விழாவின் பிரதவிருந்தினர் மாண்புமிகு கல்வி அமைச்சர் கௌரவ அகில விராச் காரியவசம் அவர்கள் நிகழ்த்தினார்.

அவ்வுரையில் இந்துக்கல்லூரியின் திருத்த வேலைகளுக்காக 12 மில்லியன் ரூபாவும் இதை தவிர புதிய 3 மாடி கட்டிடத்தொகுதி ஒன்றையும் நிர்மாணிக்க பணம் ஒதுக்குவதாக உறுதிமொழியளித்தார்.

அதை தொடர்ந்து பாடசாலை



மாணவர்களின் ஆங்கில நாடகமான "beat away the barriers" இடம் பெற்றது அதனைத்தொடர்ந்து இசைப்பிரியர்களுக்கான கானாமிர்தம் நடைபெற்றது.

இதன் பின்னர் முதலாம்நாள் காலை அமர்விற்கான நிகழ்வுகள் நன்றியுரைமற்றும் கல்லூரி கீதத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

முதலாம் நாள் மாலை அமர்வு, மாலை 5.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூஜைகள் நிறைவுற்றதும் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் விழா மண்டபத்திற்க்கு அழைத்து வரப்பட்டனர்.

முதல் நிகழ்வாக விருந்தினர்கள், அதிதிகளின் மங்கள விளக்கேற்றல், இறை வணக்கமும் நடைபெற்றது.

தொடர்ந்து தலமையுரையை முதலாவது நாள் காலை அமர்வை தலைமை தாங்கிய கொழும்பு பழைய மாணவ சங்க தலைவர் திரு மு.ந அசோகன் அவர்கள் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையை விழாவின் பிரதவிருந்தினரான பழைய மாணவரும் ஜனாதிபதியின் முன்னைனாள் மேலதிக செயலாலருமான கலாநிதி வி அம்பலவாணர் அவர்கள் நிகழ்த்தினார்.

இதன் பிற்பாடு யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் ஒழுங்கமைத்திருந்த என்னுடைய பேரனுக்காய் எவன் வைப்பான் பழத்தோட்டம்' என்ற கவிதா நிகழ்வும் அதைத்தொடர்ந்து குருசபதம்' வடமோடிக்கூத்து நிகழ்வும் இடம்பெற்றது.

அடுத்து நடுவர் கம்பவாரிதி திரு இ ஜெயராஜ் தலைமையில் சுழலும் சொற்போர் நடைபெற்றது இதில் இன்றைய தமிழ் இளைஞர்களுக்கு பெரிதும் அவசியமானது அறிவூக்கமே என்று சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல் அவர்களும் அறநம்பிக்கையே என்று தமிழருவி சிவகுமாரன் அவர்களும் அன்புள்ளமே என்று கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் ஆளுமை நிமிர்வே என்று கலாநிதி பிரசாந்தன் அவர்களும் சொற்போர் புரிந்தனர்.

அதை தொடர்ந்து நன்றியுரை மற்றும் கல்லூரிக்கீத்தத்துடன் முதல்நாள் நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவு பெற்றது.

செப்டெம்பர் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் காலை அமர்வு 8.30 மணிக்கு ஆரம்பமாகியது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனும், முன்னாள் பிரதி அதிபருமாகிய காலஞ்சென்ற கப்டன் நா.சோமசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டார்.

தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை யாழ் இந்துக்கல்லூரிக்காக அர்ப்பணித்த சோமர் என்று எல்லாரோலும் அன்பாக அழைக்கப்பட்ட கப்டன் நா.சோமசுந்தரம், அன்னையின் 125ம் ஆண்டு விழாவைப் பார்த்த பின்பே விண்ணுலகம் செல்ல காத்திருந்தவர் போல விழா முடிந்து சிறிது நாட்களிலேயே எம்மைப் விட்டுப் பிரிந்திருந்தாலும் கடும் சுகயீனத்துடனும் இவ்விழாவிற்கு இவ் பிதாமகன் பிரதம விருந்தினராக வந்திருந்தது எம் அன்னைக்கு மேலும் பெருமை சேர்த்தது என்றால் மிகையாகாது.

ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூஜைகள் நிறைவுற்றதும் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் விழா மண்டபத்திற்க்கு அழைத்து வரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றல், இறைவணக்கத்தைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை அமர்விற்கு தலைமை வகித்த சிங்கப்பூர் பழைய மாணவர் சங்க தலைவர் திரு சோ. நிரஞ்சன் நந்தகோபன் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார்.

அதனைத்தொடர்ந்து பிரதம விருந்தினரின் செய்தி விழாவில் வாசிக்கப்பட்டது. அதனையடுத்து புஷ்பாஞ்சலி மற்றும் இசையில் பக்தி எனும் இரு இசை நிகழ்சிகள் நடைபெற்றன. அதையடுத்து மாணவர்களின் சிறப்பு நிகழ்வாக கல்லூரி ஆசிரியர்களின் நெறியாள்கையில் உருவான 'Merchant of Venice' எனும் ஆங்கில நாடகம் அரங்கேறியிருந்தது.

அன்னையின் கல்லூரிக்கீதத்தில் உள்ள 'ஆங்கிலம் அருந்தமிழ்ஆரிய சிங்களம்' என்ற வரிகளுக்கு இலக்கணமாகமாணவர்களின் ஆங்கிலப்புலமை சபையோரை

வியக்கவைத்தது. அதையடுத்து 'ஒரு ஆள் அரங்கு' எனும் நிகழ்ச்சி அரங்கை அலங்கரித்தது. தொடர்ந்து 'தலைநிமிர் கலையகம்' என்னும் வில்லிசை

நிகழ்வு இடம்பெற்றது. நன்றியுரையினைத் தொடர்ந்து கல்லூரி க்கீதத்துடன் காலை அமர்வு நிறைவுபெற்றது.

125ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற கணிதவிஞ்ஞான வினா விடை சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகளும் இந்நாள் காலையில் நடைபெற்றன.

இரண்டாம் நாள் மலை அமர்வு 5.00 மணிக்கு ஆரம்பமாகியது.

யாழ் இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின தலைவர் திரு.சபா சுகந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு அ பஞ்சலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

ஞானவைரவர் ஆலயத்தில் பூஜைகள் நிறைவுற்றதும் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் விழாமண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றல், இறைவணக்கத்தை தொடர்ந்து திரு சபா சுகந்தன் அவர்களின் தலைமை உரை இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து அரங்கேறிய 'வாத்தியபிருந்தா' எனும் இசைக் கருவிகளின் சங்கமம் சபையோரை ஆனந்தப்படுத்தியது.

அதன்பின் யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் 'இந்த மண்ணில் ஒரு ஜோதி எழுந்தது' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

தொடர்ந்து மேடையை அலங்கரித்த நிகழ்வு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இதன் ஆதரவில் நடாத்தப் பட்டு வரும் ஒட்டிசுட்டான் மகாதேவா படிப்பக மாணவர்கள் வழங்கிய 'நல்லதோர் வீணை செய்தே' எனும் நாடகமாகும்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையும் அதன்பின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில 'இந்துவின் இளங்காற்று' என்னும இன்னிசை நிகழ்வு இடம்பெற்றது.

நன்றியுரையினைத் தொடர்ந்து கல்லூரி கீதத்துடன் மாலை அமர்வு நிறைவுபெற்றது.

இந்து அன்னையின் மைந்தனான தியாக தீபம் திலீபனின் நினைவு நாளான செப்டம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை கலை நிகழ்சிகள் எதுவும் நடைபெறவில்லை மாறாக, அன்னையின் 125ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட அன்னையின் மைந்தர்கள் அன்று இரத்த தானம் வழங்கினார்கள்.

மூன்றாம் நாள் அமர்வின் காலை நிகழ்ச்சிகள் செப்டெம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு சு கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்சங்கத்தின் முன்னைநாள் தலைவரும் சமூக சேவையாளருமாகிய

வைத்திய கலாநிதி. மு. வேற்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

விருந்தினர்களை விழா மண்டபத்திற்கு அழைத்து செல்வதுடன் ஆரம்பித்த காலை அமர்வுகள் விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றல், இறை வணக்கத்துடன் மேடைநிகழ்சிகள் ஆரம்பமாகின.

தலைமை உரையை தொடர்ந்து மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

75 வயதிற்கு மேற்பட்ட அன்னையின் மூத்த புதல்வர்கள் இந்நிகழ்வில் மேடையற்றிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதையடுத்து யாழ்ப்பாண பழைய மாணவர் சங்க ஒழுங்கமைப்பில் தனி நடிப்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

தொடர்ந்து கொழும்பு பழைய மாணவர் சங்க ஒழுங்கமைப்பில் திரு. பாலேந்திராவின் நெறியாள்கையில் 'நெட்டை மரங்கள்' எனும் நாடகம் இடம்பெற்றது. நாடகத்தை தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரையும் அதையடுத்து 'Jaffna Hindu Boys' எனும் ஆங்கில பாடல் இடம்பெற்றது. தொடர்ந்து பேராசிரியர் மௌனகுருவின் நெறியாள்கையில் 'காண்டவ தகனம்' என்னும் நாடகம் அரங்கேறியது.


நன்றியுரையினைத் தொடர்ந்து கல்லூரி கீதத்துடன் காலை அமர்வு நிறைவுபெற்றது.

மூன்றாம் நாள் மாலை நிகழ்வுகள் கல்லூரி அதிபர் திரு. ஐ. தயானந்தராஜா அவர்கள் தலைமையில் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகின. பிரதம விருந்தினராக மாண்புமிகு வடமாகாண முதலமைச்சர் கௌரவ சி. வி. விக்னேஸ்வரன் கலந்து சிறப்பித்தார். விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து செல்லப்படட்டு மங்கள விளகேர்றல், இறை வணக்கத்துடன் மேடை நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகின.

கல்லூரி அதிபரின் தலைமை உரையில் இவ்விழாவிற்குநிதி உதவி வழங்கிய பழைய மாணவர்கள், பழையமாணவ சங்கங்கள் குறிப்பாக கொழும்பு மற்றும் ஐக்கிய இராச்சிய கிளைகள் மற்றும் விழாவிற்கு வந்திருந்த பழைய மாணவர்கள், களத்தில் நின்று சரீர உதவி வழங்கிய இளம் பழைய மாணவர்களுக்கும், நிறைந்த மனதுடன் நினைவு கூர்ந்து,தன் மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொண்டார். அடுத்து பிரதம விருந்தினர் மாண்புமிகு முதலமைச்சர் கௌரவ சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

அதனையடுத்து மேடையேறியது 'இந்து மான்மியம்' எனும் நாட்டிய நாடகம். தொடர்ந்து கொழும்பு பழைய மாணவர் சங்க ஒழுங்கமைப்பில் யாழ் இந்து பழைய மாணவர் ஸ்ரீ. அருணந்தி அரூரன் வழங்கிய 'கீத லாவண்யம்' எனும் இசை நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து விழாவின் இறுதி நிகழ்வாக நிகழ்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் மற்றும் 125ம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பதக்கம், சான்றிதழ்கள், மற்றும் பரிசில்கள்



வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இத்தோடு கல்லூரி பிரதி அதிபர் திரு சதா நிமலன் அவர்களினால் ஒரு இன்ப அதிர்ச்சி தகவலாக ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இதன் உறுப்பினர்கள் திரு அ அஜிலன், திரு சா ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் ஆதரவில் யாழ் இந்துவின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிதியம் ஒன்று, கொழும்பு பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு க வசந்தன் அவர்களை இணைப்பாளராக வைத்து

ஆரம்பிக்கபட்ட உள்ளதையும் இதற்கு மேற்படி இரண்டு பழைய மாணவர்கள் ஆரம்ப நிதியாக 40 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்க முன்வத்துள்ளதையும் மண்டபம் நிறைந்த கரகோஷத்தின் மத்தியில் தெரிவித்தார்.

நன்றியுரையினைத் தொடர்ந்து கல்லூரிக் கீதத்துடன் 125ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட இப்பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.

தொடர்ந்து கல்லூரி மைதானத்தில் பழைய மாணவர்கள், மாணவர்களும் ஆனந்தப் பெருங்களிப்பாக ஆட்டம், பாட்டத்துடன் பட்டாசுகள், வாண வேடிக்கைகளாலும் தமது மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

எம்மைப் பொறுத்தவரை அன்னையின் இந்த பெருவிழாவினை தம் தார்மீக்க கடமையாய், களத்தில் இருந்து அனைத்து ஒழுங்கமைப்புகளையும் மிகச்சிறந்த முறையில் செயல் வடிவம் கொடுத்த இந்துவின் மைந்தர்கள் குறிப்பாக திரு மு கணேசராஜா

திரு. அரவிந்த், திரு. ஜனகன், திருபாரதன், திரு. வசந்தன் ஆகியோரை இந்துக் கல்லூரி சமூகம் என்றென்றும் நினைவு கூரும்.

நிறைவாக, எம் கல்லூரி அன்னையின் 125ம் ஆண்டு நிறைவை மிகக் கோலாகலமாகவும் மன நிறைவாகவும் கொண்டாடிய மகிழ்ச்சியுடனும் அதே நேரம் இன்றுடன் இவ்விழா முடிவு பெற்று, ஒரு வாரமாக கூடியிருந்த மைந்தர்கள் நாம் எல்லோரும் ஒவ்வொரு திசையில் பிரிந்து போகப்போகின்றோம் என்ற கனத்த இதயத்துடனும், ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தக் காலத்தில் நாங்கள் வாழ்ந்து தம் இந்து அன்னையின் பெரு விழாவில் பங்கெடுத்தோம் என்ற இறுமாப்புக் கலந்த பெருமையுடனும் உலகெங்கிலும் இருந்து வந்து கூடியிருந்த இந்துவின் மைந்தர்கள் ஒவ்வொருவராக விடை பெற்றனர்.

"வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

தொகுப்பு:


**சபா சுகந்தன்**
ஐக்கிய இராச்சிய ப. மா. ச.

தகவல் பகிர்வு:

**ஜனகன், நிருஷன், அரவிந்த், வசந்தன்**
கொழும்பு ப. மா. ச.















Sri Lanka
5.00
125








125 YEARS





JAZEEMA'S





HINDU WALK
HINDU WALK
HINDU WALK

# JKNS EDUCATION

**SUBJECTS**

**A-Level:** Biology, Chemistry, Physics, Economics & Maths

**GCSE:** Biology, Chemistry, Physics, Maths & English

**Mr K. Suthaharan** BSc (Hons) Chem, Kings College

**Contact Us**

**07717004402**


Visit Our Website For More Information

**www.jknseducation.co.uk**

**11+ CLASSES ALSO AVAILABLE**

**Includes**: English, Maths & Non-verbal Reasoning

# இந்துவின் வளர்ச்சிப் பாதையில் நாம்...



யாழ். குடாநாட்டின் சக்தி வாய்ந்த ஆதாரவளம், இன உள்ளங்களைக் கொண்ட யாழ். இந்துவின் மாண்புடைய மைந்தர்கள்.

பல நாடுகளில் வாழ்ந்தாலும் அறிவுத்திறனுடனும், ஆளுமையுடனும், தமது தாய் நாட்டினதும், கல்லூரியினதும் வளர்ச்சிக்கு ஒன்று திரண்டு, முயற்சிகளை மேற்கொள்வதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஒரு நூலில் தொடுக்கப்படும் பல மலர்கள் தான் மாலையாகின்றது.

அதே போன்று பல கலைத்துவம் மிக்க கட்டுரைகளால், செய்திகளால், கவிதைகளால் தொடுக்கப்பட்ட மலர்தான் கலையரசி.

கருத்துப் பரிமாற்றங்களுக்கு, அறிவுச் சமுதாயத்தை, அறிவுப் பொருளாதாரத்தை மிளிரச் செய்யக் கூடிய நவீன நற்திட்டங்களை தீட்டுவதற்கும், ஆக்கபூர்வமான நம்பிக்கையுடைய சிந்தனையை (Positive Thinking) மேம்படுத்தவும் பல் பரிமாண ரீதியில் வழிவகைகளை வகுத்து வழங்கி வருகின்றது.

அறிவை இற்றைப்படுத்தவும் (Update knowledge) புதிய விடயங்களுக்கான தேடலில் பலரையும் ஈடுபாடு கொள்ளச் செய்து வருகின்றது.

இவ்வுலகில் எல்லாம், இருமுறை படைக்கப்படுகின்றன.

முதலாவது ஆக்கம். எமது மனதிலும், இரண்டாவது யதார்த்தமானதாக (Reality) அமைகின்றது. சுருங்கக் கூறின், அறிவு சிந்தனை, ஆக்க சக்தி, கற்றலில் தோன்றி கூடிகூடிகலையரசியில் மலர்ந்துள்ளது என்பதைப் பலரும் உணரும் வகையில் தங்கள் கரங்களில் தவளும் என நம்புகின்றேன்.

மனிதனை ஈர்த்து அவனது கருத்தை ஒன்று படச்செய்து அவனது சிந்தனையில் புதிய அனுபவங்களையும், அறிவுச் சேர்க்கைகளையும் காட்டி அவனை ஆரோக்கியப்படுத்தக் கூடியது கலை. கலையரசி தங்களை ஈர்க்கும் என நம்புகின்றேன்.

தனது சுற்றுப் பாதையில் ஓய்வில்லாமல் வலம் வந்து கொண்டிருக்கும் ஓர் எலக்ரோனைப் போல இந்துவின் பழைய எழுச்சிக்கனல் கொண்ட மாணவர்களும் மாறி, தமது கல்லூரியினதும் தமிழ் சமூகத்தினதும் விருத்திக்காக விடாது தொண்டுகள் பல புரிவதை, புனிதமான கடமையெனக் கொண்டுள்ளார்கள் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன்.

பழைய மாணவர்களின் உள்ளங்களில் உதிக்கின்ற உன்னத எண்ணங்கள் எத்தனை என்பதைக் கணக்கிடலாமா? இவற்றில் சில நிறைவேற்றப்பட்டவை, நினைவிற்கொள்ளத்தக்கவை.

எமது நாடு, நீண்ட காலக் கல்விப் பராம்பரியங்களைக் கொண்ட நாடாகும். எனவே, கல்வி எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.

எல்லோருடைய சிந்தனையிலும் இடம்பிடிக்கவேண்டும். மக்கள் கல்வியின் விருத்தி பற்றி நன்கு அறிந்த வண்ணம் இருக்க வேண்டும். தமது பங்களிப்பை நல்க வேண்டும்.

புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஊடகங்களின் பங்களிப்பு மேலும் அதிகரிக்க வேண்டும்.

சகல இன மக்களும் ஒன்று திரண்டு, காலத்தின் தேவைக்கேற்ப பொருத்தமான கல்வியின் விருத்திக்கு உழைக்க வேண்டும். கல்வி கற்பனையின் அத்திவாரம் என விஞ்ஞானி ஐன்ஸ்ரீன் கூறியுள்ளார்.

பொதுக்கல்வியின் பிரதான நோக்கு தனிநபரின் ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்தியாகும்.

இதன் மூலம் ஒவ்வொரு பிரஜையும் சமூகப், பொருளாதார, அரசியல் கலாசார ரீதியான பங்களிப்புகளை வழங்கமுடியும்.

மானிட விழுமியங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது.

அன்பு இரக்கம்ஈ நீதி நேர்மைஈ அறம் புரிதல் போன்ற விழுமியங்கள் மனித செயற்பாடுகளிலும் ஆழ வேரூன்றி நிற்கின்றன. எனவே, சீரான கல்வி விருத்திக்கு மேற்படி விழுமியங்களின் அடிப்படையில் தொண்டுகள் புரிதல் வேண்டும்.

பொருத்தமற்ற சாதனங்களை, சமூக சீர்கேட்டுக்கு வழிவகுக்கும் பற்பல பொருட்களை, கருவிகளை பூண்டோது அழிக்க சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும்.

மாணவர்கட்கு தேவையான பாதுகாப்புகளை வழங்குவது சகலரின் பாரிய பொறுப்பாகும்.

கல்வி எனும் சமையலுக்கு (Educational Cookie) அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் இன்றியமையாத அடிப்படைக் கூறுகள். பாடசாலை நாட்டின் மூலவேர்.

எனவே கல்லூரியின் தேவைகள் இனம் காணப்பட்டு வழங்கப்பட வேண்டும். தாமதம் தவிர்க்கப்பட வேண்டும். முன்னுரிமை இன்றியமையாதாகும்.

சமுதாயத்தில், வளமாக்கப்படாத மூலப் பொருட்களை, அதாவது மாணவர்களை, வரும் காலப் பிரஜைகளை, பாடசாலை என்னும் தொழிற்சாலையில் இட்டு, பக்குவப்படுத்தி, பயன்தரும் சொத்தாக்கி சமூகத்திற்கு கையளிக்க வேண்டும் என்ற உணர்வோடு எமது ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணி ஆற்றிவருவது எமது பெரும் பேறாகும்.

காலத்துக்கு காலம் கல்விச் சீர்திருத்தங்களுக்கேற்ற வகையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் பழைய மாணவர் சங்கங்கள் உதவிகளை வழங்கி வருவது பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக அமைகிறது.

எப்படியிருந்த போதிலும் பாடசாலைக்கு வேண்டிய திட்டங்களை பலரும் அறியக் கூடிய வகையில் மேலும் விரபங்களுடன் வெளிப்படுத்தி அபிப்பிராயங்களைப் பெறுதலும் நல்ல ஆலோசனையாகும் எனக் கருதுகின்றேன்.

பல புத்தி ஜீவிகளின் கூட்டு முயற்சி கல்வி விருத்திக்கு துணையாக அமையும்.

எல்லோரும் ஒரே வகையான பொருட்களை பார்க்கலாம். ஆனால் சமமாக விளங்கிக் கொள்வதில்லை.

விவேகம் என்ற கருவியுடன், உள்ளே ஆழமாகச் சென்று உண்மைப் பொருளை அறிபவனே அதனை விளங்க முடியும், இரசிக்க முடியும்.

மனிதனின் எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன-- என்ற புத்தபிரானின் உன்னதமான கருத்தை எல்லோரும் உள்வாங்க வேண்டும்.

மனதில் தோன்றும் எண்ணங்களை, இலட்சியங்களை எழுத்தில் வடிக்கும் பொழுது பல கோணங்களில் ஆராய முடிகிறது. தெளிவைத் தருகிறது.

அடுத்து நாம் செய்ய வேண்டிய செயலை எமக்கு காட்டுகிறது.

இன்று இரு பெற்றோர் கூடிக் கதைக்கும் பொழுது தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றியும், ஏற்படும் செலவு பற்றியும் மாணவர்களின் அவலங்கள்

பற்றியும் குறிப்பிடத் தவறமாட்டார்கள். பெற்றோர் மட்டத்தில் குழப்பம் உண்டு.

இவ்விடயம் சம்பந்தமாக, பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட சில வரிகளை குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகின்றேன்.

கூகூதனியார் போதனைக்கான கேள்வி (Demand) அதிகரித்து வருகிறது. இது கல்விக்கான மாற்று முறையாகவும், வருமானம் தரும் வர்த்தகமாவும் மாறியுள்ளது.

பணக்காரப் பெற்றோர் மட்டுமன்றி மத்திய தர வகுப்பைச் சேர்ந்தோரும் தமது பிள்ளைகளை, செலவைக் கருதாது தனியார் போதினைக்கு (Tutory) அனுப்புகிறார்கள். இவ்விடயம் சம்பந்தமாக விவாதிக்க காலமும், ஒதுக்கப்பட்ட இடமும் (Time and Space) போதுமானதாக இல்லாதபடியால் தங்கள் சிந்தனைக்கு விட்டு விடுகின்றேன்.

மேலும் இன்றைய தமிழ் சமூகத்துக்கான சூழ்நிலையில், விஞ்ஞானி ஜன்ஸ்ரீனின் கருத்தொன்று நினைவுக்கு வருகிறது. எமது சிந்தனையின் அடிப்படையில், நாம் உருவாக்கிய உலகம் பல பிரச்சினைகளைகளைக் கொண்டுள்ளது. இவற்றிற்கு தீர்வு காண்பதற்ககு புதிய சிந்தனை தேவை வலிமை படைத்த சமுதாய வளர்ச்சிக்கு, அறிவாற்றல் ஒரு சாதனமாக இருந்து வருகிறது.

அறிவுக்கு உருக்கொடுக்கவும், பரப்பவும், பாதுகாக்கவும் பயன்படுத்தவும், திறன் கொண்ட சமுதாயத்தால் தான் முடியும். விமர்சன விழிப்புணர்வுகளுக்கான தூண்டுதலை கல்வி வாயிலாக வளர்க்க வேண்டும்.

இந்த வகையில் இந்துவின் புலம்பெயர்ந்த மைந்தர்கள் ஆகிய நாம் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப சிந்தனைகளை உள்வாங்கி, நீடித்து நிலைத்திருக்க கூடிய ஆக்க நடவக்கைகளை மேற்கொள்வோமாக.

இராசரத்தினம் உதயராஜ்
1988 (பொ.த உயர்தரம்)



# LINKS LEGAL
S O L I C I T O R S

*Today's legal solutions*

## We've been helping thousands with the law, how can we help you?





*Contact:*

**Jeevah D. Haran**
Consultant Solicitor

Mobile: 0795 728 9061 | Email: jeevah@linkslegal.co.uk
DDI: 0208 498 7219 | Tel: 020 8551 0999

| | |
|---|---|
| Immigration<br>(Visa Applications and Appeals) | - குடிவரவு<br>(இசைவு விண்ணப்பங்கள் மற்றும் மேன்முறையீடு) |
| Residential Conveyancing | - வீடு கொள்வனவு \| விற்பனை |
| Commercial Conveyancing | - வர்த்தக காணிகள் கொள்வனவு \| விற்பனை |
| Business Transfers | - வியாபார மற்றும் குத்தகை கைமாற்றங்கள் |
| Commercial Litigation | - வர்த்தகம் சார்ந்த வழக்குகள் |
| General Litigation | - பொது வழக்குகள் |
| Family & Children | - குடும்பம் மற்றும் பிள்ளைகள் சார்ந்த வழக்குகள் |
| Landlord & Tenant | - வாடகைப் பிணக்குகள் |
| Wills & Probate | - உயில் எழுதல் மற்றும் உறுதிப்படுத்தல் |
| Employment Law | - தொழில்சார் சட்டம் |
| Crime | - குற்ற வழக்குகள் |

ACCREDITED MEMBERS OF THE LAW SOCIETY'S CONVEYANCING QUALITY SCHEME

42 Redbridge Lane East, Ilford, Essex, IG4 5EX | Tel: 0208 551 0999 | Fax: 0208 551 2979 | Email: info@linkslegal.co.uk

WWW.LINKSLEGAL.CO.UK

THE MARK OF EXCELLENCE FOR THE HOME BUYING PROCESS.

THE LAW SOCIETY ACCREDITED Conveyancing Quality

# யாழ் இந்துவின் சாரணியம்

125 வருட கால வரலாற்றினை கொண்டமைந்த எமது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னையின் வரலாற்றுப் பக்கங்களில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வேண்டியவற்றுள் இன்று கல்லூரி சாரணர் துருப்பின் தோற்றமும் அதன் வளர்ச்சிப் போக்கும் நூற்றாண்டினை நோக்கிய எமது 4 வது யாழ்ப்பாணம் சாரணர் துருப்பானது கல்லூரி மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பினை வளர்த்து அவர் தம் வாழ்விலே சிறக்க தமிழ் தம் எழுச்சியின் எல்லாப் பக்கங்களிலும் இந்துவின் சாரணர்களின் நாமம் எழுதப்பட்டே இருக்கின்றது. என்றால் மிகையாகாது.

## ஆரம்பம்

அதிபர் திரு. சஞ்சீவராவ் அவர்களினால் 1910ம் ஆண்டிலேயே சாரணர் கட்டமைப்பு எமது கல்லூரியிலே உருவாக்கப்பட்டது. இக் காலப்பகுதியல் இலங்கை நாட்டிலேயே சாரணர் சங்கம் உருவாக்கப்படவில்லை.

1912ம் அண்டு இலங்கையில் சாரணர் சங்கம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமாக 1916ம் ஆண்டு 4வது யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழு உதயமானது. கால் றிச்மண்ட கல்லூரி சாரண ஆசிரியர் திரு. து. ஏ மென்டிஸ் அவர்களால் 21 சாரணர்களுடன் எமது துருப்பு தனது பயணத்தினை ஆரம்பித்தது.

## பயிற்சிப் பாசறைகள்

சாரணர் வாழ்வினில் பாசறை வாசமானது முக்கிய பங்கினை வகிக்கின்றது.


எமது துருப்பினைப் பொறுத்த வரையில் வருடாந்தம் 2ற்கு மேற்பட்ட பயிற்சி பாசறைகள் பாடசாலை வளாகத்தில் நடைபெற்று வருகின்றமை வழக்கமாகும்.


1978ம் ஆண்டு பூநகரி பல்லவராயக் கட்டிலும் 1979ல் முல்லைத்தீவு மாணவர்கள் முறிப்பிலும் 1980ம் அண்டு இரணைமடுவிலும், 2004ம் அண்டு மல்லாவி வவுனியாக்குளத்திலும் இடம்பெற்ற பயிற்சிப் பாசறைகள் எமது துருப்பின் சிறப்பினை வெளிப்படுத்தி எமது வரலாற்றில் மைற்கற்களான அமைகின்றது.

1997 ம் ஆண்டு 2007ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டிலே போர்ச்சூழல் காணப்பட்ட போதிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பாசறை வாசகங்கள் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டமை சிறப்பானதொரு அம்சமாகும்.

## மாவட்டப் போட்டிகள்

எமது சாரணர் துருப்பானது ரீ-தியல் தனக்கொரு தனித்துவமான



இடத்தினை வகித்து வருகின்றது. மாவட்ட ரீதியிலான போட்களில் முதன்மை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இறுதியாக 2011ம் ஆண்டு யாழ் பூங்காவில் இடம்பெற்ற வடமாகாண ஜம்போறியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் அணி நடை, பாசறைப்பகுதி, தளக்காட்சி, (Standing Display) ஆகியவற்றில் முதலிடம் பெற்று முதன்மையான குழுவாகத் தெரிவு செய்யப்பட்டது.

## ஜம்போறி

இலங்கையில் இடம்பெற்ற ஜம்போறிகள் அனைத்திலுமே யாழ் மாவட்ட அணியினை தலைமை தாங்கும் பொறுப்பு திறமையடிப்படையில் எமது துருப்பிற்கே வழங்கப்பட்டு வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

1918ம் ஆண்டு கண்டி ஜம்போறியிலும், 1925, 1964, 1974, ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற அகில இந்திய ஜம்போறிகளில் எமது துருப்பின் பிரதிநிதித்துவம் அமையப் பெற்றிருந்தது.

1982 ம் ஆண்டு ஜப்பான் மற்றும் அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற ஜம்பொறியில் பங்கு கொண்டு மலர் வெளியீடு செய்தமையும், 1992ம் ஆண்டு குருநாகலில் இடம்பெற்ற 4 வது தேசிய ஜம்போறியில் நாட்டின் அசாதரண சூழ்நிலையிலும் கிளாலி கடல் வழிப் பாதையினூடு பல சிரமங்களுக்கு மத்தியிலும் சென்று பங்கு கொண்டமை சிறப்பிற்குரிய விடயமாகும்.

அதனைத் தொடர்ந்து, 1998ல் கண்டியில் இடம்பெற்ற 5வது தேசிய ஜம்போறிகளிலும், 2002ல் காலியிலும் எமது துருப்பானது தனது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டது.

2006ம் ஆண்டு நுவரேலியாவில் இடம்பெற்ற 7வது தேசிய சாரணர் ஜம்போறிகளில் எமது துருப்பு சாரணர்கள் பங்கு கொண்டு முன்னோடி செயற்பாடுகளை மேற்கொண்டமை எமது துருப்பின் சாதனைப் பக்கங்களுள் ஒன்றாகப் பதிவாகியது.

மேலும் 2010ம் ஆண்டு அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 8வது தேசிய ஜம்போறிகளிலும், 2012ம் ஆண்டு இலங்கை சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தம்புள்ளையிலும் நடாத்தப்பட்ட 29வது ஆசிய பசுபிக் ஜம்போறியிலும் எமது குழு பங்கு கொண்டது.

இவ்வாண்டு மாசி மாதம் வெற்றிகரமாக நடந்து முடிந்த9வது தேசிய சாரணர் ஜம்போறிகளிலும் எமது துருப்பின் சிறப்பினை நிலைநாட்ட தவறவில்லை.

## ஆண்டு நிறைவு விழா

1936ம் ஆண்டு எமது 20வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு சிவனொளிபாதமலைக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

எமது 75 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 1991ம் ஆண்டு அன்றைய கல்லூரி அதிபர் அவர்கள் 3வது தவணையை சாரணர் தவணையாக பிரகடனம் செய்தமை.

எமது துருப்பின் மீது அவர் கொண்டிருந்த மரியாதையினையும் நம்பிக்கையினையும் எடுத்துரைக்கின்றது. 66, 70, 75, 84, 85, 93 ம் ஆண்டு நிறைவு விழாக்களின் போது சிறப்பு ஆண்டு விழா மலர்கள் வெளியீடு செய்யப்பட்டன.


அத்துடன் வருடாந்தம் ஆண்டு நிறைவு விழாக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

## போர்ச்சூழலும் இடப்பெயர்வும்

1996ம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் எமது துருப்பின் பெரும்பகுதியான வழங்கள் இழக்கப்பட்டும், எமது ஆவணங்களும் அழிந்து போயின.

